கிறது. அம்மாதிரி அவர்கள் தொழில் தொடங்குவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு வேண்டிய அத்தனை உதவியும் செய்கிறது. அதனால் அந்தத் தொழில் வளரவேண்டும் என்பது தான் நம்முடைய நோக்கம்.

திரு. எஸ். அக்னிராஜு : மதுரை மாவட்டத்தில் வைகை ஓரத்தில் கரைப் பகுதியில் லட்சக்கணக்கான மரங்கள் இருக்கின்றன. அந்த மாவட்டம் பற்றி பரிசீலனையில் இருக்கிறதா? அப்படியில்லை என்றால், அங்கே கயிறு திரிக்கும் தொழிற்சாலை ஆரம்பிக்காததின் நோக்கம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் முன்னால் குறிப்பிட்டபடி எந்தெந்த மாவட்டங்களில் முயற்சிகள் எடுக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் உதவி செய்யவேண்டும் என்பது தான் இந்தத் திட்டத்தின் குறிக்கோள். இட்ட தட்ட. ரூ. 82,000-ல், ரூ. 70,000 கடனைக் கொடுக்கிறோம். ஸ்டேட் எய்டு இன்டஸ்ட்ரீஸ் ஆக்டின் கீழ் கடனைக் கொடுக்கிறோம். எந்தெந்த இடத்தில் கூட்டுறவு சங்கங்கள் அமைத்து இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இருக்கிறார்களோ, அவர்களுக்கெல்லாம் அரசாங்கம் உதவி செய்யும். சுஊம் அங்கத்தினர்கள் ஆர்வத்தோடு இந்தத் தொழிலில் ஈடுபட்ட மக்களை ஒன்றாகத் திரட்டி கூட்டுறவு சங்கம் அமைப்பதிலே ஈடுபடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே இந்தக் கயிறு திரிக்கும் பயிற்சி பெற்றவர்களுக்கு அரசாங்கம் ஊக்கம் கொடுக்கிறதா அல்லது தடுத்து நிறுத்துகிறதா என்று அறியலாமா?

(பதில் இல்லை.)

Mulberry plantation in Hosur taluk

*400 Q.—Thiru B. Venkataswamy : Will the Hon. the Minister for Indsustries be pleased to state—

(a) Whether any scheme was introduced in the year 1967–68 to give poramboke lands for lease to plant mulberry plantation in Hosur taluk;

(b) if so, the extent given for lease; and

(c) the extent in which mulberry has been raised so far?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 20.79 ஏக்கர்.

(உ) 9.50 ஏக்கர்.

Thiru K. S. Kothandaramiah : Some years back about eleven thousand acres of poramboke lands were set apart for giving to those who come forward to take up mulberry cultivation. It was entrusted to the Revenue Department, but it has not done anything. During the last budget session I suggested that a committee may be formed with the Sub-Collector, the Sericulture Expert and the local M.L. As. to make arrangements for giving the lands quickly. But so far no action has been taken. May I request the Hon. Minister to take early steps?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நேற்று முன் தினம்தான் இதற்காக அப்படிப்பட்ட விவசாயிகளைச் சார்ந்த மாநாடு ஹோசூரில் நடத்தப்பட்டது. இந்த 11,000 ஏக்கர் சொச்சம் புறம்போக்காக, தனிப்பட்டவர்கள் ஆக்ரமிப்பில் இருக்கிறது. இதைத் திருத்தி பட்டா செய்து கொடுங்கள், மல்பெரி செடியை உற்பத்தி செய்கிறோம் என்று சொல்லுகிறார்கள். அவர்களுடைய கருத்திற்கு ஏற்ப அந்தப்பகுதியில் அரசாங்கத்தின் சார்பில் கிட்டத்தட்ட 2,400 ஏக்கரில் இந்தச் செடிகளை உற்பத்திசெய்வதற்காக தனிப்பட்ட நபர்கள் அனுபவிக்கும் நிலங்களில் அவர்களுக்கே பட்டா கொடுத்து, அந்தச் செடியைப் பயிர்செய்ய உதவி செய்ய வேண்டும் என்று நேற்று முன் தினம் கூறிய ஆலோசனைகளை அரசாங்கம் பரிசீலிக்கும்.

திருமதி வி. ப. பழனியம்மாள்: தலைவர் அவர்களே, தற்சமயம் பட்டின் விலை அதிகமாக இருப்பதால், இந்த முசுக்கட்டை மரங்களை அதிகமாக உற்பத்தி செய்ய அரசாங்கம் முன்வருமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நம்முடைய பட்டுத் தொழில் எவ்வளவு அதிகமாக நடைபெற்றாலும், நமக்குக் கிடைக்கக் கூடிய கோரா என்ற மூலப் பொருள் கர்நாடகத்திலிருந்துதான் கிடைக்க வேண்டியிருக்கிறது. ஆகவே தான் அதற்கான முயற்சியை ஹோசூரில் ஒரு பகுதியில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

சிறுவாணி குடிநீர்த் திட்டம்

* 401 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சிறுவாணி குடிதண்ணீர் திட்டத்திற்காக அணைகள் கட்டும் வேலை எப்போது துவக்கப்படும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது குறித்து கேரள அரசுடன் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

திரு. சு. துரைசாமி: பேரவைத்தலைவர் அவர்களே, கோவையில் எப்ரல்-மே மாதங்களில் மிகுந்த தண்ணீர்க் கஷ்டம் வரும். ஆகவே, மிக விரைவில் வேலை செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுப்பார்களா? எவ்வளவு காலத்தில் தில் இது முடியும்?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஏப்ரல்-மே மாதங்களில் வருகிற தண்ணீர் தட்டுப்பாட்டை இந்த திட்டத்தை நிறைவேற்றினாலும் தீர்க்க முடியாது. மற்ற திட்டமும் நடைபெறவேண்டும். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில், கேரள அரசின் ஒப்புதல் பெற்றவுடன் வேலைகள் தொடங்கப்படும்.

பூம்புகாருக்கும் சென்னைக்குமிடையே பேருந்து பணி

* 402 வினா—திரு. எஸ். கணேசன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

சென்னையிலிருந்து பூம்புகாருக்கு அரசுப் பேருந்து விடும் செயற்குறிப்பு ஏதும் அரசுக்கு உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இல்லை.